gender & mine action

# நூல் வெளியீட்டின் தொகுப்பு
# ‘‘பால்நிலையும் நிலக்கண்ணி வெடிகளும் - எண்ணக்கருவிலிருந்து செயல்முறைக்கு’’

பால்நிலையானது கண்ணிவெடி செயற்பாட்டில் ஒருங்கிணைக்கும் பகுதியாக உள்ளதால் அதனை புறக்கணிக்கக்கூடாது. ஏனெனில், நிலக்கண்ணி வெடிகளினால் பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஏற்படும் பாதிப்பின் தன்மை வேறுபட்டிருப்பதுடன், அவர்களுக்கான உதவிகளும் வேறுபட்ட வகையிலேயே வழங்கப்படுகின்றன. மேலும், இவ் முக்கிய விடயத்தை கோடிட்டு காட்டும் பிரகாரம், சுவிஸ் பிரச்சாரக் குழுவானது நிலக்கண்ணி வெடிகளை தடைசெயற்வதற்காக ‘‘பால்நிலையும் நிலக்கண்ணிவெடிகளும்-எண்ணக்கருவிலிருந்து செயல்முறைக்கு’’ என்னும் அறிக்கையினை வெளியிட்டுள்ளது. இவ் அறிக்கையில், கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டில் பால்நிலையின் முதன்மைத்துவத்தைப்பற்றி ஆராயப்பட்டுள்ளது. இவ்அறிக்கையானது கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்காக வரையப்பட்டுள்ளது. குறிப்பாக கொள்கை வகுப்பாளர், நிகழ்ச்சித் திட்டமிடலாளர்கள், கொடை வழங்குனர்கள், திட்டத்தை அமுல்படுத்தம் நிறுவனங்கள் மற்றும் ஆதரவு வழங்குனர்கள், உதாரணமாக ஆரம்பநிலை பெண்கள் அமைப்புக்கள் போன்றோரை உள்ளடக்குகிறது.

இவ் அறிக்கையானது, கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டில் பால் நிலையின் தாக்கத்தை விளக்குமுகமாக ஒரு நாட்டில் எவ்வாறு பால்நிலையின் முக்கியத்துவம் விளங்கிக்கொள்ளப்பட்டுள்ளது, அங்கீகரிக்கப்பட்டுள்ளது அல்லது மறுக்கப்பட்டுள்ளது, அமுல்படுத்தப்பட்டுள்ளது மற்றும் அடையப்பட்டுள்ளது என்பதை நாடுகளின் ஆழமான களஆய்வின் ஐந்து குறிப்புகளினூடாக வெளிப்படுத்துகின்றது. இவ் அறிக்கையில் கண்ணிவெடி செயற்பாட்டில் பால்நிலையின் பிரதான நான்கு அம்சங்களை (கண்ணிவெடி அகற்றுதல்/அளவையிடல், கண்ணிவெடி அபாயக்கல்வி, பாதிக்கப்பட்டோருக்கான உதவி, மற்றும் பரிந்துரை) வெளிப்படுத்தப்படுகிறது. பால்நிலை முன்மாதிரிக்கான நல்லொழுக்க நெறிகளை களத்திலிருந்து வழங்குகிறது. இவ் அறிக்கையின் பிரதான அம்சம் யாதெனில் பால்நிலையானது சமத்துவத்தை மட்டுமன்றி அதன் தரத்தினையும் கொண்டுள்ளது என்பதாகும். மக்களின் தேவைகளையும் விவகாரங்களையும் கருத்தில் கொள்வதுடன் பால்நிலை புலப்பதிவை ஒருங்கிணைத்துக்கொள்வதன் மூலமாக, கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டு நடவடிக்கையின் பெறுபேறு மற்றும் தாக்கம் என்பன கணிசமான அளவு முன்னேற்றமடையும்.

## கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டில் பால்நிலையினை முதன்மைப்படுத்துவது தொடர்பான மாயைகள்.

**மாயை 1 : ‘‘கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளில் பால்நிலை முதன்மைத்துவமானது, பெண்களை மட்டும் இலக்காகக் கொண்டு அவர்களுக்கு நன்மையளிக்கின்றது.’’**

கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டுடன் பால்நிலை புலப்பதிவை இணைப்பதன் மூலமாக சமூகத்தின் அங்கத்தவர்களான பெண்கள், யுவதிகள், ஆண்கள், மற்றும் இளைஞர்கள் உள்வாங்கப்பட்டு பயனடைவார்கள். ஒரு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உதாரணத்திலிருந்து, கண்ணிவெடியினால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் உள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய இருபாலரையும் ஆய்வாளர்களாகக் கொண்ட ஆய்வுக்குழுவினை அமைத்து, அதனூடக தகவல் சேகரிக்கும் போது, கண்ணிவெடியினால் பாதிக்கப்பட்ட வேறுபட்ட இடங்களை பெண்கள் மற்றும் ஆண்களினது வேறுபட்ட அறிவு அனுபவம் மூலமாக, அடையாளம் காணுவது சுலபமாக இருக்கும். மேற்கூறப்பட்ட உதாரணத்தின் மூலமாக விளங்கிக்கொள்வது யாதெனில், ஓர் குழுவினர் மட்டும் ஆய்வில் ஈடுபடுத்தப்பட்டிருப்பின் பெறுமதிமிக்க சில தகவல்கள் விடுபடக்கூடியதாக அமைந்திருக்கும்.

Campagne suisse contre les mines antipersonnel
3bis, chemin des Pontets, CH-1212 Grand-Lancy, Geneva, Switzerland.
Tel. +41 22 879 10 52 - Fax. +41 22 879 10 51
info@scbl-gender.ch www.scbl-gender.ch www.stopmines.ch

**மாயை 2 : ‘‘பால்நிலையானது கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டை செயற்படுத்துவதற்கு சிக்கலானதும் செலவீனமானதுமாகும்.’’**

பால்நிலையானது சிக்கலானதாக இருந்தபோதிலும் அதன் அம்சங்கள், பிரதேசம் அல்லது கலாச்சாரத்திற்கு அப்பால் கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டில் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பால்நிலை முதன்மைத்துவமானது சிறிய அளவில் குறைந்த செலவீனத்தோடு நடைமுறைப்படுத்தக்கூடியதாகும். உதராணமாக பெண்கள், யுவதிகள், ஆண்கள், மற்றும் இளைஞர்கள் தங்களின் பங்களிப்பை உறுதிசெய்வதற்காக கண்ணிவெடி அபாய கற்கை நெறிக்கான விடயத்தில் பால்நிலை விழிப்புணர்வு அனுகுமுறையானது உள்ளடக்கப்பட்டுள்ளது. இந் நடவடிக்கையானது குறைந்த செலவீனத்துடன் இருப்பதுடன், மற்றும் இவ்விடயங்களில் எந்தவொரு பாலரும் தவிர்க்கப்படுவதை உறுதிப்படுத்துவதுடன் சமூகத்திலுள்ள சகல அங்கத்தவர்களையும் சென்றடையக்கூடியதாக அமையும்.

**மாயை 3 : ‘‘கலாச்சாரம் மற்றும் மரபுகள் கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் பால்நிலையை முதன்மைபடுத்துவதில் பிரதான தடைகளாக அமைந்துள்ளன.’’**

ஓர் குறித்த நாட்டின் தனித்துவ நிலமையை கருத்தில் கொண்டு கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளில், பால்நிலை முதன்மைத்துவத்தை இணைத்துக் கொள்வது தொடர்பாக கலாசாரமும் மதமும் தொடர்ந்து விவாதிக்கப்பட்டுள்ளன. ஆயினும் அனுபவ ரீதியான ஆய்வுகள் நடத்தப்படும் போது பெறுபேறுகள் எதிர்மாறான விளைவுகளை ஆதரிப்பதாக அமையும். உண்மையில் அறிவின்மையும் முயற்சியின்மையும் தடைகளாக காணப்படுவதோடு மாயைகளுக்கு காரணமாக அமைகின்றன. உலகளாவிய ரீதியில் நிறுவனங்கள் வெற்றிகரமாக பெண்களை கண்ணிவெடியகற்றும் பணியாளர்களாக நியமிக்கும் போது, வேறு நிறுவனங்கள் இந் நடவடிக்கையினை ‘‘நடைமுறைச்சாத்தியமற்றது’’ எனக் கூறியுள்ளன. உதராணமாக இவ் நிறுவனங்கள் பால்நிலை அவதானிப்புகள், பிரதேசவாரி போட்டிகள் மற்றும் எண்ணங்கள் ஊடாக பணிநிலைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது கலாச்சாரம், மரபுகள் தடைகளாக அமைந்தபோதிலும் உண்மையில் இவை தடைகளாக இருப்பதில்லை.

**மாயை 4 : ‘‘பால்நிலை முதன்மைத்துவம் என்பது பெண்களுக்கான இலகுவான வேலை வாய்ப்பு.’’**

பால்நிலை புலப்பார்வையானது பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதன் மூலமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாக பல நிறுவனங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. இவ் வேலைவாய்ப்பினை உறுதிசெய்வதற்கு ஓர் உதராணமாக, கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பினை பெண் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் மூலமாக உறுதிப்படுத்த முடியும். இச் செயற்திட்டமானது லாவோஸ், கம்போடியா, லெபனான் ஆகிய சில தேசங்களிலே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இப் பெண்கள் அப்பிரதேசங்களில் ஏனைய பெண்களுக்கு முன்மாதிரிளாகவும் உந்துசக்திக்கான மூலகர்த்தாக்களாகவும் காணப்படுகின்றனர். ஆனால் பெண்களுக்கு கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டில் வழங்கப்பட்ட வேலைவாய்பானது மாற்றமடையாதது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வழமையாக பெண்கள் கண்ணிவெடி அகற்றும் பணியை காட்டிலும் நிர்வாகம், கல்வி அல்லது புனர்வாழ்வு பணிகளுக்காக அமர்த்தப்பட்டு வந்தனர். இவை மரபுரீதியாக ஆண்களுக்கே வழங்கப்பட்டுவந்துள்ளன. பால்நிலை முதன்மைத்துவத்தில் பெண்களுக்கான வேலைவாய்பென்பது ஒரு பகுதி மாத்திரமே, ஆனால் சமத்துவம் மற்றும் தரம் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கு இது போதியதன்று.

**உங்களுக்கு தெரியுமா ?**

- 2006ம் ஆண்டளவில் கண்ணிவெடிகளாலும் போரினால் கைவிடப்பட்ட வெடி பொருட்களாலும் பாதிப்புற்றோர் 5,751 ஆகும், இதில் ஆண்கள் 89%.
- பாதிக்கப்பட்டோரிற்கான உதவி வளங்கலிலுள்ள பால்நிலை சமத்துவமின்மை காரணமாக, ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்கள் குறைவான உடனடி சுகாதார சேவைகளை பெறுகின்றனர். இதன் விளைவாக பெண்கள் (43%) பாதிக்கப்படும் சதவீதமானது ஆண்களை (29%) பார்க்கிலும் அதிகமாக காணப்படுகின்றது.
- கண்ணிவெடியினால் பாதிப்புற்று உயிர்வாழ்பவர்களின் மனைவியர்கள் வீட்டு வன்முறைகள் போன்ற ஆபத்துக்களை எதிர்நோக்குபவர்களென சில ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றது.

- கண்ணிவெடி அகற்றப்பட்ட நிலப்பரப்புகளை அடைவதற்கான வாய்ப்புக்களில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையே சமனற்ற நிலை கானப்படலாம்.
- ஆண்களே பிரதான பாதிப்புக்குழுவாக காணப்பட்டபோதிலும், கண்ணிவெடி ஆபாயக்கல்வியானது பெண்களை இலக்காக கொண்டே வழங்கப்படுகின்றது.
- ‘‘பாதிக்கப்பட்டவர்’’ என்ற உத்தியோகபூர்வ வரைவிலக்கணம் கண்ணிவெடியினால் நேரடியாக பாதிக்கப்பட்டு உயிர்தப்பியவர்களை (பெரும்பாலானவர்கள் ஆண்களாக இருந்தும்) மட்டும் உள்ளடக்கியதன்று. அவர்களுடன் தங்கிவாழ்பவர்களையும் (பிரதானமாக பெண்கள்) உள்ளடக்கியுள்ளது.

